


**24.05.2025**

## தலைப்பு செய்திகள்

1. நிதி ஆயோக் அமைப்பின் 10ஆவது நிர்வாக குழு கூட்டம் பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

2. இந்தியா ஜெர்மனி நாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு வலுப்பெற்று வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

3. புதுக்கோட்டையில் கட்டமைக்கப்படும் உள் விளையாட்டரங்கம் விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்று துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் கரும்பு விவசாயிகளுக்கான நிலுவை தொகையை வழங்க 98 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாநில சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.ராஜேந்திரன் கூறியுள்ளார்.

5. மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் இறுதி ஆட்டத்திற்கு இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த் முன்னேறியுள்ளார்.

***********

**நிதி ஆயோக்**

பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் 10ஆவது நிதி ஆயோக் நிர்வாக குழு கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

பிரதமரின் துவக்க உரைக்கு பின்னர் பல்வேறு மாநில முதலமைச்சர்கள் துணை நிலை ஆளுநர்கள் பங்கேற்ற சிறப்பு அமர்வுகள் பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்றது.

2047-ல் வளர்ந்த பாரதம் வளர்ந்த மாநிலங்கள் என்ற இந்தாண்டின் கருப்பொருளுடன் தொழில்முனைவோர், திறன் மேம்பாடு, நீடித்த வேலை வாய்ப்பு உள்ளிட்டவை குறித்து இதில் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

வளர்ச்சிக்கான சவால்களை எதிர்கொள்ளும் வகையில் மாநிலங்களிடையே ஒருமித்த கருத்தை உருவாக்கி வளர்ச்சி பாதையில் மாதிரி நாடாக இந்தியாவை முன்னெடுத்து செல்வது குறித்து இதில் விரிவாக ஆராயப்பட்டதாக தெரிகிறது..

பல்வேறு மாநில முதலமைச்சர்கள், யூனியன் பிரதேசத்தின் துணை நிலை ஆளுநர்கள் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

தமிழக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் மாநிலத்தில் நிலுவையில் உள்ள நிதிசார்ந்த கோரிக்கைகளை பிரதமரிடம் இன்று வலியுறுத்துவார் என தெரிகிறது.

***********

**மன் கி பாத்**

இதனிடையே அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 122-வது முறையாக பிரதமர் நாளை காலை 11 மணிக்கு உரையாற்றுகிறார்.

அனைத்து வானொலி நிலையங்கள், தூர்தர்ஷன், பிரதமர் அலுவலக யூடியூப் அலைவரிசை, Airnews இணையதளம், Newsonair செயலியில் இந்நிகழ்ச்சி நேரடியாக ஒலிபரப்பாகும்.

தொடர்ந்து 11.30 மணிக்கும் இரவு 8 மணிக்கும் இதன் மொழியாக்கம் இடம்பெறும்.

***********

**ஜெய்சங்கர்**

தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு ஜெர்மனியின் ஆதரவிற்கு மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் நன்றி தெரிவித்துள்ளார்.

பெர்லினில் நடைபெற்ற வெளியுறவு கவுன்சில் கூட்டத்தில் பேசிய அவர் பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு எதிரான ஆபரேசன் சிந்தூர் நடவடிக்கை சர்வதேச அளவில் இந்தியாவின் மீதான புரிதலை அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டார்.

பாகிஸ்தானிலிருந்து செயல்படும் தீவிரவாத அமைப்புகள் மீதான இந்திய ராணுவத்தின் துல்லிய தாக்குதல் நடவடிக்கைகள், தீவிரவாதத்திற்கு எதிரான நமது உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாக தெரிவித்தார்.

இந்தியா ஜெர்மனி நாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு வலுப்பெற்று வருவதாக அமைச்சர் கூறினார்.

நெதர்லாந்து டென்மார் ஜெர்மனி நாடுகளுக்கு மேற்கொண்ட தமது 6 நாள் அரசு முறை பயணத்தை திரு.ஜெய்சங்கர் இன்று நிறைவு செய்கிறார்.

***********

**மத்திய குழு**

ஆபரேசன் சிந்தூர் நடவடிக்கை குறித்து விளக்கம் அளிப்பதற்காக பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பைஜெயந்த் பாண்டா தலைமையிலான அனைத்து கட்சி குழு இன்று பஹ்ரைன் சென்றடைந்தது.

எல்லை தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் உறுதியான நிலைப்பாட்டை பஹ்ரைன் நாட்டு பிரதிநிதிகளிடம் இக்குழுவினர் எடுத்துரைக்க உள்ளனர்.

வெளியுறவுத்துறை செயலர் திரு.ஹர்ஸ் வர்த்தன் ஷ்ரிங்லா, AIMIM நாடாளுமன்ற உறுப்பினர் அஸாதுதின், திரு.குலாம் நபி ஆஸாத் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ள இக்குழுவினர் சவுதி அரேபியா, குவைத், அல்ஜீரியா நாடுகளிலும், தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடு குறித்தும் எடுத்துரைக்க உள்ளனர்.

காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சசிதரூர் தலைமையிலான அனைத்து கட்சி குழுவினர் இன்று அதிகாலை புதுதில்லியிலிருந்து கயானாவிற்கு புறப்பட்டு சென்றது.

தொடர்ந்து அமெரிக்கா பனாமா, பிரேசில், கொலம்பியா நாடுகளுக்கு இக்குழுவினர் செல்கின்றனர்.

ஏற்கனவே உலக நாடுகளுக்கு சென்றுள்ள குழுவினர் இந்தியாவின் நிலைப்பாடு குறித்து தாங்கள் சென்றுள்ள நாடுகளில் விரிவாக எடுத்துரைத்து ஆதரவை திரட்டி வருகின்றனர்.

***********

**அனுப்பிரியா பட்டேல்**

நாட்டு மக்களின் சுகாதார நலத்திற்கு உயர் முன்னுரிமை வழங்கும் வகையில் மத்திய அரசு மாநில அரசுகளுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுவதாக மத்திய சுகாதார குடும்பநலத்துறை இணை அமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் வடகிழக்கு முதலீட்டாளர்கள் உச்சிமாநாட்டில் உரையாற்றிய அவர் அனைவருக்கும் தரமான சிகிச்சை குறைந்த செலவில் கிடைப்பதை நோக்கமாக கொண்டு மத்திய அரசு மருத்துவம் சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக கூறினார்.

***********

**உதயநிதி**

புதுக்கோட்டை மாவட்டத்தில் நான்கரை கோடி ரூபாய் மதிப்பிலான பல்முனை உள் விளையாட்டரங்க கட்டுமான பணிகள் இந்தாண்டு இறுதிக்குள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்று துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

புதுக்கோட்டையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி திட்டங்கள் விரைந்து முடிக்க அறிவுறுத்தப்பட்டிருப்பதாக குறிப்பிட்டார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி அருணா மற்றும் பல்துறை அதிகாரிகள் பங்கேற்ற ஆய்வுகூட்டத்தில் கலந்துகொண்டு இம்மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி திட்ட பணிகளின் முன்னேற்றத்தை திரு.உதயநிதி ஸ்டாலின் ஆய்வு செய்தார்.

***********

**ராஜேந்திரன்**

தமிழகத்தில் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலை விவசாயிகளுக்கு கரும்பு கொள்முதலுக்கான நிலுவை தொகையை வழங்க 97 கோடியே 77 லட்ச ருபாய் நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளதாக மாநில சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்ட அறிக்கையில் இதன்மூலம் 6 லட்சத்து 9ஆயிரத்து 30 கரும்பு விவசாயிகள் பயனடைவார்கள் என்றும், இத்தொகை சம்மந்தப்பட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மூலம் விவசாயிகளின் வங்கி கணக்குகளுக்கு விரைவில் அனுப்பிவைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

கரும்பு விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி அதிக பரப்பளவில் கரும்பு சாகுபடி மேற்கொண்டு கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கி பயன்பெறுமாறு அவர் அறிவுறுத்தினார்.

கரும்பு சாகுபடி பரப்பை அதிகரிக்கவும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை மேம்படுத்தவும் மாநில அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

***********

**அமைச்சர்கள்**

சென்னை திருவொற்றியூர் துறைமுகத்தை மாநில அமைச்சர்கள் திரு.அனிதா ராதாகிருஷ்ணன் திரு.சேகர்பாபு ஆகியோர் இன்று ஆய்வு செய்தனர்.

வரும் 28ஆம் தேதி நடைபெற உள்ள மீன்பிடி துறைமுகம் திறப்பு விழா மற்றும் புதிய திட்ட பணிகள் அடிக்கல் நாட்டு விழாவை ஒட்டி இந்நடவடிக்கை.

275 கோடி ருபாய் மதிப்பிலான புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்படுவதோடு பல்வேறு நல திட்ட உதவிகளும் அன்றைய தினம் வழங்கப்பட உள்ளது.

***********

**வானிலை**

கேரளாவில் தென்மேற்கு பருவமழை இன்று தொடங்கியுள்ளது.

2009ஆம் ஆண்டிற்கு பின்னர் முன்னதாகவே தென்மேற்கு பருவமழை கேரளத்தில் தொடங்குவது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே கொங்கன் கடற்கரைக்கு அப்பால் கிழக்கு மத்திய அரபிக்கடலில் நிலை கொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழவு பகுதி காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு.செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ராமேஸ்வரம் பாம்பன் தூத்துக்குடி குளச்சல் சென்னை, எண்ணூர், கடலூர், காட்டுப்பள்ளி உள்ளிட்ட 11 துறைமுகங்களில் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

நாகை மாவட்டத்தில் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக எமது நாகை செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***********

**கோவை மழை**

கோவை மாவட்டத்தில் கன மழைக்கான ஆரஞ்ச் வண்ண எச்சரிக்கை இன்று விடுக்கப்பட்டுள்ளதால் பேரிடர் மீட்பு குழுவினர் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

கோவை மாவட்ட மலை பகுதிகளில் நாளை அதி கன மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில் அரக்கோணத்தில் இருந்து தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே மழைக்கால பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பவன்குமார் அனைத்து துறை அதிகாரிகளுடன் இன்று ஆலோசனை மேற்கொண்டுள்ளார்.

மாநகரில் உள்ள வாய்க்கால்கள் தூர்வாரும் பணிகளையும், மழை நீர் தேங்க வாய்ப்புள்ள இடங்களையும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.கிராந்திகுமார் பாடி ஆய்வு செய்தார்.

***********

**நீலகிரி மழை**

உதகை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் தொடர்ந்து சாரல் மழை பெய்துவருவதால் நிலச்சரிவு அபாயம் உள்ள 14 இடங்களில் இரண்டாயிரம் மணல் மூட்டைகள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் இதற்கான முடிவு எட்டப்பட்டது.

மழை பாதிப்புகள் குறித்து 24 மணி நேர கண்காணிப்பு பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இதனிடையே சாரல் மழை காரணமாக உதகை படகு இல்லத்தில் படகு சவாரி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

***********

**கோடை விழா**

கொடைக்கானல் பிரயண்ட் பூங்காவில் 62ஆவது மலர் கண்காட்சி இன்று தொடங்கியது.

*கொய் மலர்களால் வடிவமைக்கப்பட்ட மயில், புவிசார் குறியீடு பெற்றுள்ள திண்டுக்கல் பூட்டு, மலை பூண்டு, கொய்யாகனி, செல்.ஃபி பாய்ண்ட் கங்காரு உள்ளிட்ட உருவங்களை சுற்றுலா பயணிகள் ஆர்வத்துடன் கண்டு களிப்பதாக எமது திண்டுக்கல் செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*வரும் ஒன்றாம் தேதிவரை நடைபெறும் இவ்விழாவை ஒட்டி கலை நிகழ்ச்சிகளுக்கும், விளையாட்டு போட்டிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.*

***********

எடப்பாடி

தமிழக ஊரக பகுதிகளில் வீட்டு வரி உயர்வை மாநில அரசு உடனடியாக திரும்ப பெற வேண்டும் என அஇஅதிமுக பொதுச்செயலர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் பன்மடங்கு உயர்த்தப்பட்ட சொத்து வரியால் ஏழை மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும், சுட்டிக்காட்டியுள்ளார்.

***********

**TNPSC**

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குரூப் 4 தேர்விற்கு விண்ணப்பிக்க இன்று கடைசி நாளாகும்.

கிராம நிர்வாக அலுவலர், தட்டச்சர், இளநிலை உதவியாளர், வருவாய் ஆய்வாளர், வன காப்பாளர் உள்ளிட்ட 3 ஆயிரத்து 935 காலி பணியிடங்களுக்கு வரும் ஜூலை 12ஆம் தேதி எழுத்து தேர்வு நடைபெற உள்ளது.

***********

இருவரி

**விருதுநகர் மாவட்டம் வெம்பகோட்டையில் 3ஆம்** கட்ட அகழாய்வு பணிகள் நிறைவடைந்தன.

இதில் சூதுபவளமணி, மோதிரம், தங்கமணி, கண்ணாடி மணிகள், சுடுமண்ணால் ஆன உருவ பொம்மைகள், சங்கு வளையல்கள் உள்ளிட்ட ஐந்தாயிரத்து 3 பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தொல்லியல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**திருவாரூர் மாவட்டத்தில் நீர்வளத்துறை சார்பில்** 17 கோடியே 60 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் ஆயிரத்து 377 கிலோ மீட்டர் தொலைவிற்கு நடைபெறும் தூர்வாரும் பணிகளை மாவட்ட கண்காணிப்பு பொறியாளர் திரு.ராமலிங்கம் இன்று ஆய்வு செய்தார்.

**பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த படித்த** வேலை வாய்ப்பற்றோர் அரசின் மாதாந்திர உதவிதொகை பெற வரும் 31ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ் தெரிவித்துள்ளார்.

***********

**கிரிக்கெட் - இங்கிலாந்து**

இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கான இந்திய கிரிக்கெட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அணி தலைவராக ஷுப்மன் கில்லும், துணை தலைவராக ரிஷப்பந்தும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தை சேர்ந்த சாய் சுதர்சன், வாஷிங்டன் சுந்தர், ஆகியோர் இதில் இடம்பெற்றுள்ளனர்.

***********

**கிரிக்கெட்**

ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் ஜெய்பூரில் இன்று இரவு ஏழரை மணிக்கு பஞ்சாப் கிங்ஸ் - டெல்லி கேப்பிட்டல்ஸை எதிர்கொள்கிறது.

***********

**பேட்மிண்டன்**

கோலாலம்பூரில் நடைபெறும் மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் இறுதி ஆட்டத்திற்கு இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த் முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற அரையிறுதியில் அவர் ஜப்பானின் Yushi Tanaka-வை 21-18 24-22 என்ற நேர் செட்களில் வென்றார்.

***********

**மீண்டும் தலைப்புச்செய்திகள்**

1. நிதி ஆயோக் அமைப்பின் 10ஆவது நிர்வாக குழு கூட்டம் பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

2. இந்தியா ஜெர்மனி நாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு வலுப்பெற்று வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

3. புதுக்கோட்டையில் கட்டமைக்கப்படும் உள் விளையாட்டரங்கம் விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்று துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் கரும்பு விவசாயிகளுக்கான நிலுவை தொகையை வழங்க 98 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாநில சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.ராஜேந்திரன் கூறியுள்ளார்.

5. இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணி தலைவராக ஷுப்மன் கில் அறிவிக்கப்பட்டுள்ளார்.

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

***********